DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.
**CC. No.128/2017**

| Deposition of witness for | : | PW7 (LW 3) | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | நவநீதகிருஷ்ணன் | Age | : | 52 |
| Father's Name | : | சம்பந்தம் | Occupation | : | விவசாயம் |
| Village | : | ஸ்ரீவாஞ்சியம் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of March 2023.

14.03.2023

**(Accused produced from judicial custody).**

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் ஸ்ரீவாஞ்சியத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கோவிந்தராஜ் எனது அண்ணன். எனது அண்ணன் எனக்கு பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 2017-ம் வருடம் ஒரு நாள் விடியற்காலை 03.00 மணியளவில் எனது பக்கத்து வீடான எனது அண்ணன் வீட்டில் ஒரு அலறல் சத்தம் கேட்டது. நானும், எனது மனைவியும் என்னவென்று சென்று பார்த்தோம். அப்போது எனது அண்ணி தனது தாலிக் கயிற்றை யாரோ அறுத்து சென்றுவிட்டதாக சொல்லி சத்தம் போட்டு கொண்டிருந்தார். அந்த தாலிக் கயிற்றில் திருமாங்கல்யம், 2 பவுன் குண்டுகள் ஆகியவற்றை அறுத்து சென்றுவிட்டதாக கூறினார். நான், எனது மனைவி மற்றும் எனது தம்பி வாஞ்சிநாதன் ஆகியோருடன் ஓடி சென்று தேடிப் பார்த்தோம். கிடைக்கவில்லை. எனது அண்ணன் கோவிந்தராஜ் நன்னிலம் காவல் நிலையத்தில் கண்டுபிடித்து தர வேண்டி புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.**

**மறு விசாரணை** : இல்லை.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
NANNILAM.

**CC. No.128/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | PW8 (LW 5) | Caste | : | |
| Name | : | பக்கிரிசாமி | Age | : | 58 |
| Father's Name | : | முருகையன் | Occupation | : | சலூன் கடை |
| Village | : | ஸ்ரீவாஞ்சியம் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of March 2023.

14.03.2023

**(Accused produced from judicial custody).**

**முதல் விசாரணை** :

நான் தற்சமயம் ஸ்ரீவாஞ்சியத்தில் குடியிருந்து சலூன் கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கோவிந்தராஜ் எனக்கு தெரியும். கடந்த 2017-ம் வருடம் கோவிந்தராஜ் வீட்டில் தாலி, குண்டு மற்றும் திருமாங்கல்யம் ஆகியவற்றை யாரோ அறுத்து சென்றுவிட்டார். அது சம்பந்தமாக கோவிந்தராஜ் கொடுத்த புகாரில் போலீசார் கோவிந்தராஜ் வீட்டில் வந்து விசாரித்தார்கள். என்னை சாட்சியாக போட்டிருப்பதாகவும், என்னை கையொப்பம் போடவும் சொன்னார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். சம்பவ இடத்தை போலீசார் வந்து பார்வையிட்டார்கள். என்னிடத்தில் காட்டப்படும் அ.சா. 2-ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மறு விசாரணை** : இல்லை.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் (மு.கூ.பொ.), நன்னிலம்.